உ

ஸ்ரீமத் விராட் விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்-தொழில்.

சம்-6.] சித்தார்த்தி௵ புரட்டாசி௴ -1919௵ செப்டம்பர்௴ [சஞ்-9

## மாதர்போதம்.

பூதேவியிடத்து உற்பவித்த பெறுதற்கரிய மக்கட் பிறப்பினராகிய ஆண்பெண் இருபாலரில் ஆண்பாலரே பெண்பாலரைக் காட்டிலும் தேக அமைப்பில் இயற்கையாக திடகாத்திரமுள்ளவர்களாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். எனினும், அறிவென்பது இருபாலருக்கும் பொதுவென்பதே அறிவாளிகளின் கொள்கை. ஆனால், தேகபலத்திற்குத் தக்கவாறு மனோபலமும் விருத்தியடையக் கூடுமானதால் பொதுவாய் ஆண்மக்களே புத்திசாலிகளாகவும் அறிவாளிகளாகவும் இருக்கிறார்களென்பது ஒருவாறு பொருந்தும். பெண்மக்களும் தேகபலத்தை விருத்தி செய்து மனோபலத்தை அதிகப்படுத்தலாமென்பதும் முடியாததன்று.

இயற்கையிலே புருஷர்கள் கடினவேலை செய்து உழைக்க ஆரம்பிப்பதினால் அவர்களுடைய தசைகள் கணுக்கணுவாய்த் திரட்சியடைந்து தேக உறுதியைக் கொடுக்கின்றன. பெண்பாலரோ சொகுஸாயமைந்த சரீரத்தினால் கடினவேலை செய்யக் கூடாமலிருக்கிறார்கள். அதினாலேதான் அவர்களை மெல்லியர் என்றும், பூவையர் என்றும்; பதுமை என்றும், இளங்கொடி, வஞ்சிக்கொடி என்றும் கவிகள் வர்ணிக்கிறார்கள்.

நிற்க, அறிவைப்பற்றிய விஷயத்தைமாத்திரம் இங்கு கவனிப்போம். அறிவென்பது இருபாலருக்கும் பொதுவாய் உரித்தானதென்பதற்கும், அதிலும் பெண்பாலர்களே நுண்ணறிவுடையோர் என்பதற்கும் பல திருஷ்டாந்தங்கள் உள. ஆனால், சுபாவத்தில் பெண்களுக்கு பேதமை யென்பது உடன்பிறந்தேயிருக்கிறதென்பதை ஆட்சேபிக்க முடியாது. தொடுத்த காரியத்தில் தைரியமும், ஊக்கமும் பெண்பாலரிடத்தில் நிலைத்திருப்பதில்லை என்பதற்கு அவர்கள் தேக அமைப்பே காரணமாகவிருக்கிறது.

பாடசாலைகளில் ஓரே வகுப்பில் வாசிக்கும் சிறுவர் சிறுமிகளில் சிறுமிகளே புத்திகூர்மையுள்ளவர்களாயிருக்கிறார்களென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனால், அவர்கள் யௌவன பருவமடைய அறிவு குன்றக் காண்கிறோம். அறிவை விருத்தி செய்வது கல்வி. அஃதாவது நூலாராய்ச்சி.

"நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு....."

எவ்வளவுக்கெவ்வளவு சாஸ்திரங்களை ஆராய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அறிவு விசாலமடைகிறது. ஆண்மக்கள்மட்டும் கல்வி பயிலவேண்டுமென்பது முற்றிலும் தவறு. கல்வியின் பெருமையைப்பற்றிப் புகழாதவர் எவருமிலர்.

'குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழ
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து [கும்

நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.'—என்று நாலடியா

ரும்,

கற்றவரே மானிடரென்றும் கல்லாதவர் மிருகங்களுக்கு ஒப்பானவரென்றும் பொருந்தும்படி,

"விலங்கொடு மக்களனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் திருவாய்மொழிந்திருக்கின்றனர். ஆகையால், பெண்மக்களும் அவசியம் படிக்கவேண்டுவதுதான்.

கல்விக்குப் பிறப்பிடமாகிற சரஸ்வதியே பெண்ணென்று கொள்ளுகிறோம். இவ்வம்மணிக்கு உறைவிடம் பிரம்மாவென்ற பரமபுருஷனின் நா: நாவினது குணத்தை எல்லோரும் நன்குணர்வர். கசப்பு இனிப்பு என்னும் அறுசுவையை அறியக்கூடிய ஓர் நுட்பமான கருவியிடத்தில் இச் சரஸ்வதி வாசம் செய்வதால், கல்வி என்பது, "நன்மை எது" "தீமை எது" என்று அறியும்படியான விவேகத்தை உண்டுபண்ணும் சக்தி. ஆனால், தற்போதுள்ள ஆங்கிலப் படிப்புள், நம்மதாசாரத்தை உணராத கிறிஸ்தவ உபாத்திமார்களிடத்திற் கற்கும் கல்வியும் நமது இந்தியப் பெண்களுக்கு பிரயோசனத்தைத் தாரா. பெண்கள் தமது தாய்ப் பாஷையைக் கற்றுக்கொண்டு அதன்பால் மிகுந்து கிடக்கின்ற மதசம்பந்தமான கிரந்தங்களைக் கற்றுக்கொண்டால் போதுமானது.

கல்வி என்பது விவேகத்தை விருத்தி செய்வதற்கல்லாமல் புருஷரைப்போல் உத்தியோகம் செய்யவும், யுத்தகளத்திற் போய் சண்டைபோடவும் வேண்டுவதல்ல. அப்படி இருக்கும்பக்ஷத்தில் ஆண்தன்மை வீரத்தன்மை என்றும், பெண்தன்மை பேதமை என்றும் பதங்கள் ஏற்பட்டிருக்கவேண்டுவதில்லை. பெண்கள் எவ்விதக் கல்வித்திறமை வாய்ந்தவரெனினும், அதி நுட்ப விவேகசாலிகளெனினும் புருஷருள் அடக்கம்பெற்றிருக்க வேண்டுவதே இயற்கை.

"பிதா ரக்ஷதி கௌமாரே
பர்த்தா ரக்ஷதி யௌவநே
ரக்ஷந்தி வர்த்தகே புத்ரான
ஸ்திரி ஸ்வாதந்திரிய மர்ஹதி"

என்ற நீதிசாஸ்திர வசனப்படி, பெண்கள் இளம்பிராயத்தில் தகப்பன் ஆதரவிலும் யௌவன காலத்தில் புருஷன் ஆதரவிலும் வயோதிக காலத்தில் புத்திரர்களாதரவிலும் இருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கல்விக்குத் தாயாகிய சரஸ்வதியே அவளது புருஷனாகிய பிரம்மாவின் சக்திக்கு அடக்கமென்றால் மற்ற ஸ்திரீகளைப்பற்றி என்ன சொல்லக்கிடக்கும்!

அறிவாளிகளான புருஷர்கள் பெண்களை இகழ்ந்து பேசி அடிமையாக்கிக்கொள்ள கிஞ்சித்தும் மனம் துணியார். ஸ்திரீகளை குரூரமாய் நடத்தும் புருஷர்கள் நரகத்தில் இடந்தேடிக்கொள்ளுகிறார்கள். ஸ்திரீகளுக்குப் போதுமான கல்வி கொடுத்தால்மட்டும் இல்லற தர்மத்தைச் சரிவர நடத்தக்கூடும் என்றபோது இவர்களைப் பரிபாலிக்கும் புருஷர்களுக்கு கல்விவாசனை இல்லாதிருக்கலாமென்பது எங்ஙனம்பொருந்தும்? (கவனியுங்கள்!) ஸ்திரீகளை புருஷர்கட்கு உயிர்த்துணை வாழ்க்கைத்துணை என்று முதியோர் கூறியுள்ளார். அவர்கட்கு அறிவி

ல்லையெனின், அவர்களை அவ்விதம் கூற நியாயமுண்டாகுமா? ஆகையால், பெண் மக்கள் ஆண்மக்களைக்காட்டிலும் எத்துணையும் தாழ்ந்தவரன்று. ஆனல். பெண்பாலார்க்கு நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு ஆகிய நான்கும் இயற்கையிலே உரியன.

படர் கொடிக்கு எங்ஙனம் ஓர் கொழுக்கொம்பு ஆதாரமோ அதுபோலவே பெண்களுக்குப் புருஷன் ஆதாரம். அதாவது கொழுநன் (கொழுக்கொம்பு போன்றவன்). ஸ்திரீகளின் விருத்தி கொழுநன்பாற் சார்ந்திருக்கிறது அதுபற்றியே.

"குலமகட்குத் தெய்வம் கொழுநனே" என்றார் சான்றோர். புருஷர்களிலும ஸ்திரீகளிலும் முதியோர் மொழிக்குப் படிந்தவர்கள்தான் படித்தவர்கள், படியாதவர்கள் படிக்காதவர்களே; ஸ்திரீகள் எவ்வளவு புத்திசாலிகளாயினும் புருஷனின் இஷ்டம் போல் நடந்துகொள்ளவேண்டுவது அவசியம்.

புருஷன் பெண்சாதி ஒருமைப்பட்டு வாழ்ந்தாலன்றி இல்லறவாழ்க்கை நடைபெறாது. ஸ்திரீகள் கணவனுக்கு இனியவர்களாயும், பிறரிடத்தில் பேசும்போது மிருதுவான பாஷை உடையவர்களாயும், சற்றுமே சலியாதவர்களாயும் முகமலர்ச்சியோடு இருப்பதற்கும் காரணம்கல்வியே. மற்றும்,

"கார்யேஷு தாசி, கரணேஷு மந்த்ரி
ரூபேஷு லக்ஷ்மி, க்ஷமயா தரித்ரி
ஸ்நேகசு மாதா, ஸயனேது வேஸ்யா
ஷட்கர்ம யுக்தா, குலதர்ம பத்தினி"

என்றதுபோல் குடும்ப வேலையில் பணிப்பெண்போலவும், காரிய ஆலோசனைகளில் மந்திரிபோலவும், ரூபத்தில் மகாலக்ஷ்மிபோலவும், பொறுமையிற் பூமிதேவிபோலவும், அன்பில் தாய்போலவும், படுக்கையில் வேசிபோலவும் கணவன் விஷயத்தில் பிரவர்த்திக்கக்கூடிய குலதர்மபத்தினியாவதற்கு கல்வியே பிரதானம்.

புருஷன் கஷ்டவேலை செய்து சம்பாதிப்பதிலேயே தேகம் களைப்படைந்து அலுத்துப் படுத்துக்களைப்பாறவேண்டி இருக்கிறது. பெண்பாலர் குடும்பகாரியங்களைச் செட்டாகப் பார்க்கவும் குழந்தைகளைப் பாதுகாக்கவும் காலாகாலங்களில் அவர்களைப் பள்ளிக்கு அனுப்பி கல்விபயிலவும் செய்வது பெண்மார்களின் தொழிலாகவே இருக்கின்றது. தாய்மார்கள் புத்திசாலிகளாயிருந்தால்மட்டும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் சன்மார்க்க நெறியில் நிற்கக்கூடியவராவார்கள். இல்லையேல், அவர்கள் பெற்ற பிள்ளைகளினல் பயனென்றில்லை. இகபர சுகத்திற்கும், தேச நன்னிலைமைக்கும் பெண்கல்வியே முக்கிய காரணம்.

கௌரி அம்மாள்,
(Mrs K P. V. ஆச்சார்ய)

---

## விஸ்வகர்மானுஷ்டான வேதமஞ்சரி.

இதில் ஸ்நானம், விபூதிதாரணம், சந்தியாவந்தனம், புருஷ ஸூக்தம் ஸ்ரீ ஸூக்தம், மந்திரபுஷ்பம், தீபாராதனை மந்திரம், விக்னேஸ்வரபூஜை, புண்ணியாவசன மந்திரம், ஆசீர்வசன மந்திரம், அபிவாதன முதலியவை தமிழெழுத்துகளிலெழுதி யச்சிடப்பட்டிருக்கின்றன. கோத்திர சூத்திர பிரவரையாதியவைகளைத் தெளிவாய் விளக்குஞ் சட்டமும் அடங்கியிருக்கிறது. விலை அணா 2.

விஸ்வகர்ம புத்தகசாலை,
சிந்தாதிரிப்பேட்டை.

## உலக துன்பம்.

உலக துன்பமானது உடம்போடொட்டிய பிணியாகும். அதை நமக்களிக்கும் சர்வேசுரரது திவ்யானுக்கிரக திரு உளத்தைத் திறந்து பார்த்தால், அவ்வளவும் அப்பரம கருணாநிதி நம்மீது வைத்திருக்கும் கருணாவிலாசத்தின் வயப்பட்டதாக இருக்குமானால், அப்பரமேசனது கிருபா வீக்ஷண்யத்தை விரும்பா வெறும்பாவியும் உலகத்திலுண்டா? அவருடைய கிருபாநிதியில் மனிதர்களுக்கு எவ்வளவு மாறுப் பேராசை உண்டென்பதும், அவர்களுடைய மனோரதப்படியே தமது கருணா நலத்தை ஏராளமாயளிக்கவேண்டி அப்பரமேசனுக்கிருக்கும் தயாளத்தையும், அவர்க்கவரறிவாரன்றிப் பின்பு அவரவர் சுயாநுபவமாயுள்ள அவற்றை அதற் கன்னியமாயுள்ள நாம் இத்தன்மையதென மற்றவர்க்குச் சூசிப்பிக்க இயலாதாம்.

பரம கருணாநிதியாகிய சர்வேசுரர் கணப்போதும் விலகாமல் நம்மீதே சர்வதா தமதருட்கண் கொழிக்கும் மேம்பட்ட ஆதரவிற்கும், நாம் நல்லவர்களாயிருக்கினும் தீயவர்களாயிருக்கினும், நாம் கேட்கினும், கேளாதிருக்கினும் தமது திருவருட்பாக்கியங்களை ஏராளமாய் நமக்குக் கொடுத்துக்கொண்டே இருக்க, நாம் அடைந்துகொண்டே இருக்கும் சர்வசுதந்தரத்திற்கும், மனிதர்களெனப்பட்ட நாமே பாத்திரர்களாக இருக்கிறோம்.

மனிதர் நீங்கலான மற்றைய பசுபக்ஷியாதி ஜீவகோடிகளிடத்து சர்வேசுரருக்கு அவ்வளவு தயாளத்துவமில்லையென்று அவர்க்குத் தோஷம் கற்பிக்கினும் குற்றமன்றே. பரந்த உலகத்திலெங்கும் நிறைந்துள்ளநாம ரூபங்களான சர்வ சேதனாசேதன நிலைமைகளிலிருந்தெல்லாம் படிப்படியாக உயர்த்தி, எப்போது நம்மைச் சர்வேசுரர் மனித உருவகப்படுத்தினாரோ, அப்பொழுதே நம்மைத் தமது சமீபத்தில் அழைத்துக் கொண்டார். பிரபஞ்ச நாமரூபப்பொருள்களெல்லாம், நாம் பல இடங்களில் முளை செடி மரம் கட்டை கரி முதலான பேத வுருவங்களைப் பார்த்தால் முளையே செடியென்றும் செடியே மரமென்றும் மரமே கட்டை என்றும் கட்டையே கரியென்றும் விகசிதமாயறிகிறோம்.

அது போலவே உலகத்தில் உயிருள்ளவும் இல்லவுமான தாது தாவர ஜீவத் தொகுதிகளில் பல பகுதிகளாய் நாம ரூபங்கள் ஒன்றிற்கொன்று பேதித்து எவ்விதத்திலும் அவற்றை ஒன்றுபடுத்தற் கொற்றுமைப்படா விகற்பத்தோடு விரவிக்கிடந்தாலும் அவையெல்லாம் ஒன்றன் நிலைமையிலிருந்தே இவ்வாறு வேறுபட்டன வேறுபடுகின்றன வேறுபடப் போவன என்பதாய் ஜனனநீதியாய் கிருபாநிதியாகிய சர்வேசுரர் ஆக்ஞாவிலாசத்தின் வசப்பட்டு படிப்படியாய் உயர் பதவி பெற்று வருகின்றன. ஆகவே, முதலில் கல் மண் முதலிய அசித்துக்களி லிருந்து மனிதப் பிறவியின் எல்லைவரை அவ்வவற்றின் கர்மபரிபக்குவநிலைமைக்குத் தக்க வாறாகக் கரசரணாதி அவயவங்களிலும், குணங்குறி செய்கைகளிலும் வித்தியாசப் பட்டுப் பிரத்தியக்ஷமாக நமது கண்ணிற்கு இப்பிரபஞ்சம் விளங்குகிறது.

நிற்க, மனிதப் பிறவி யென்பது சர்வேசுரருடைய சமீபத்தில் கிட்டிவிட்டதென்று முன்னே சொன்னோம். குணவந்தனாயிருந்தாலும், குணவீனனாயிருந்தாலும் தந்தையினுடைய சம்பத்துக்களை அடையத் தனயனுக்கு யாதொரு தடங்கலுமில்லாததுபோல ஞானிகளாயிருந்தாலும், அஞ்ஞானிகளாயிருந்தாலும் சர்வேசுரருடைய கிருபாநிதியை மனிதர்களடைய யாதொரு ஆக்ஷேபணமுமில்லை. கடவுளானவர் நம்மீதிருக்கும் அருட்பெருக்கத்தால் உலகிலுள்ள அநேக துன்பப் பிறவிகளிலெல்லாம் எளிதாக விரைவில் நடத்தி முடிவில் தமது தெய்வ சக்திக்கு ஒத்து இயலுகின்ற கரசரணாதி அவயவங்களுடனும், அவற்றைத் தீவிரமாய்ப் பற்றிப் பிடிக்கும் தெய்வஞானத்துடனும் விளங்கும் இம்மானிடப் பிறவியைக் கொடுத்தார்.

ஆயினும், நம் விஷயத்தில் அவருடைய பிரயாசை இனி ஒழிந்தது என்யதற்கிடமில்லை. பொதுவாய் உயிர்களெல்லாம் அசித்துக்களோடு சம்பந்தமும், அவற்றிலொரு சுவை உணர்ச்சியும் பெற்றிருத்தலால், அச்சுபாவமானது மனிதஜெனனத்தில் தடித்துவிடுகின்றன. விபரீத விவகாரிகளுக்குக் கொடுத்த செல்வமானது எவ்வாறு துர்வினியோகத்திற் குதவுகின்றதோ, அதுபோலவே மனிதர்களுக்குச் சர்வேசுரர் கொடுத்த ஞானமானது அவர்களுடைய அகம்பாவத்திற்கே உபயோகப்படுகின்றது. அதனால், கடவுள் மனிதஜென்மத்தை நமக்களித்தும் நமக்கு உண்மை அறிவின்மையால், நம் விஷயத்தில் சர்வேசுரர் முன்னிலும் அதிகப் பிரயாசை



எடுத்துக்கொள்ளவேண்டிய தவசியமென்பதேற்படுகிறது.

சர்வேசுரருடைய தன்மையும், நம்முடைய தன்மையும்; அவருடைய செய்கையும்; நம்முடைய செய்கையும்; அவருடைய விழைவும், நம்முடைய விழைவும்; அவர் கருத்தும் நம் கருத்தும் அதற்கிது முற்றிலும் விரோதப்பட்டுக் கிடக்கின்றது. மனித ஜெனனமானது இத்தேக மண்டலத்தை எல்லைகாணும் பூரணஞானம் இயற்கையிலமையப்பெற்று அவற்றின் காரண காரியங்களை அறிந்தநுபவிக்கும் செய்கை இருப்பினும், சர்வேசுரர் மனிதர்களுக்களிக்கக் கருணை ததும்பும் பரம பகத்திற்கு ஆளாக இவ்வுலகப் பிடித்தமும் வாசனையும் நம்மைத் தடைப்படுத்துகின்றன. ஆயினும் கிருபாநிதியாகிய சர்வேசுரருக்குத் தனது நித்யமங்கள நிரதிசயானந்த நிதியைக் கலந்தாழாமல் நமக்களித்துக் கடைத்தேற்ற வேண்டுமென்பது தீராக்கடமை யாதலால், நம்மைத் தமது உயர்பதவிக்கு உயர்த்த உயர்த்த அது காரணமாய் நமது உலகவாசனை அவற்றோடு தொடரத்தொடர நமக்குத் துன்பம் விளைகின்றது.

அவர் நமக்கென்று வைத்திருக்கும் பேரின்பத்திற்கு அவாநுபவித்துக்கொண்டிருக்கும் பேரானந்தப்பெருஞ்சாகரப்பெருக்கே சாக்ஷியாகும். அவர் நமக்குக் கொடுக்கும் சக்திக்கு அவருடைய அகண்டைகரச சர்வசக்தியேசாக்ஷியாகும். அவர் நமக்குக்கொடுக்குங் குணங்களுக்கு அவருடைய அனந்த குண ப்ரவாகங்களே சாக்ஷியாகும். ஒரு கோவிலை ஸ்தூலமாக அறியாதவர்கள் எவ்வாறு அவற்றினுள்ளமைந்த அற்புத சிற்பவிசித்திரங்களைக் காண இயலாதவர்க

ளோ, அதுபோலவே கடவுளைக் காணுதவர்கள் அவருடைய அற்புத குணனுபவங்களையும் காணமுடிவதில்லை. உலகத்தில் மேலான பதவிபெற்ற மஹா ஞானிகளாயிருந்தாலும், அவருடைய தெய்வீக சித்துக்களையெல்லாம் யாவரும் பார்த்து வியக்கத்தக்கதாக இருந்தாலும், சர்வேசுரருடைய பூரண சக்தியில் கோடானுகோடிக் கொரு கூறுயினுமுண்டு என்பதற்கிடமில்லை. அவருடைய அகண்டைகரச ஞானமானது வாசாமகோசரமா யிருத்தலால் தேசிகளுடையும் ஞானம் சிறிதேயாம். மனிதர்கள் தேக மண்டல உணர்ச்சியற்று அரூபப் பிரவேசம் அதிகரிக்க சர்வேசுரருடைய வியாபக சக்தியும், தெய்வஞானமும் அதிகரிக்கின்றன.

அத்தகைய சர்வேசுரருடைய நித்யானந்த பரிபூரண நிலைமையை நாம் அடைதற்கு நம்மை நாமே அழித்துக்கொண்டு, அவருடைய கட்டளைக்கு அடங்கி நடத்தல் அத்தியாவசியமாயிருக்கின்றது. பொதுவாய் மனிதர் நீங்கலான மற்றை ஜீவராசிகளின் தவம் மனிதப்பதவியையும், மனிதர்களின் தவமானது கடவுளையும்பற்றி யிருத்தலால், மனிதர்களுக்கெல்லாம் ஆத்ம ஞானம் அல்லது சூட்சமஞானம் இயற்கையில் அமைந்திருக்க வேண்டியதவசியம். ஜீவகோடிகள் மனிதப்பதவியடைந்துவிட்டால் இத்தேக மண்டலத்தின் முடிவு பதவியின் எல்லை சேர்ந்ததாகும். அவ்விதமே மனிதர்களும் தாம் தெய்வபதவி யடைந்தாலன்றி தம் பிறவிப்பேறு பெறுததாகும். இதுவே சர்வேசுரருடைய திருச்சித்தமும் அவர் நமக்களிக்கும் சோதனைகளின் உட்கருத்துமாக இருக்கிறது. சர்வேசுரருடைய ஆக்ஞா பூதிகளை நமது மஹா அஞ்ஞான மனத்தால் எண்ணினுல் திடீரென்று பதைபதைக்கும். அவருடைய அருள் விலாசங்களைப் பகைத்திருக்கின்ற காரணத்தினுலேயே அவை நமக்கு நேர் விரோதமாகத் தோன்றுகிறது.

ஆயினும், நாம் இந்த மனித ஜெனனத்தை அடைந்தபோதிலும், அவற்றிற் கியற்கையாயுள்ள சுகபோகங்களைக் குறைவின்றி அநுபவித்துவரினும், இவைகளே போதும் என்கிற திருப்தி மனிதர்களுக்கு யதார்த்தமா யில்லவேயில்லை. மனிதர்களுடைய பேராசைமுடிவும், அவர்களுடைய கைதவங்களின் முடிவும், அவர்களுடைய எண்ணங்களின் முடிவும் சர்வேசுரருடைய ஐக்கியமே இறுதி எல்லையாதலால் உலகத்தில் எத்தகைய உயர்பதவியிலிருப்பினும், மனிதர்களுக்கு மேல்'நோக்கும் சக்தி' இயற்கையிலமைந்து சகல கர்மங்களுக்குந் தூண்டுதலா யிருக்கின்றன.

நம்முடைய மனோரதப்படி விழைவதெல்லாம் அளிக்கவேண்டுமென்பது சர்வேசுரருடைய திருவருட்சித்தமாதலால் நம்மால் அறியப்படாத நம்முடைய ஆசையின் யின்படியே நமக்களிக்கும் கடவுள் கற்பனை நமக்கு முற்றிலும் விரோதிக்கின்றது. அதாவது, நம்மை அரோகதிட காத்திரிகளாய் உலகத்தில் வாழ்விக்க வேண்டுமென்பது நம்முடைய அறிவீனத்தால் சர்வேசுர சந்நதியில் விக்ஞாபிக்கும் பிரார்த்தனை. சர்வேசுரர் திருவருள் விசாலமோ, நம்மைப் பலவீனர்களாக வாழ்விக்கவேண்டுமென்பதாகும். நம்முடைய மனோரதம் நித்யசுக ஜீவியாக வேண்டுமென்பதாகும், சர்வேசுரருடைய கருணைததும்பும் தீவிரமோ, நம்மை இக்ஷணத்திலேயே அழிக்கவேண்டுமென்பதாகும்.

T1024

இவ்வாறே, கோடிக்கணக்காக விரியும் நம்முடைய அஞ்ஞானப் பேராசையும், கடவுளுடைய திருவருளும் பெரிதும் பேதப்பட்டுக் கிடக்கின்றன. ஆகவே, இவ்வுலகம் நன்கு மதிக்கும் செல்வம், உத்தியோகம், தேகதிடம் முதலான உயர்பதவிகளைப் பார்க்கினும் இவற்றிற்கு விரோதமான தாரித்திரம், சிரமஊதியம், துர்ப்பல தேகம் முதலிய குறைவு நிலைமைகள்தான், சர்வேசுரருடைய சொரூபதரிசனம் தோற்றுவிக்கப்படும் அவசரங்களாக இருக்கின்றன. ஆகவே, ஜனனமாதி மரணமீறான நமது பிறவித்துன்பங்களெல்லாம் சர்வேசுரருடைய அருள்விலாச அநுக்கிரகங்களாக விளங்குகின்றன.

துன்பத்தைப்போல மனிதர்களுக்கு நன்மை பயப்பது வேறெதுவுமில்லை. துன்பத்தினாலேயே மனிதர்களுடைய சுபாவம் உண்மையான நன்மையாக மாறுதலடைகின்றது. புடம்வைத்தால் தங்கத்தினுடைய களங்கத்தை நீக்கிப் பரிசுத்தப்படுத்தும் அற்புதசக்தி நெருப்பிற்கே உள்ளதுபோல, மனிதர்களுடைய சுபாவத்தை நிஷ்களங்கப்படுத்தும் அதிசயசக்தி துன்பத்திற்கே அமைந்திருக்கின்றது. யதார்த்த நெறியில் மனிதர்களுக்கு அதிதீவிரப்பற்று ஏற்படுவதற்கு இன்றியமையாத்துணைக்கருவி துன்பமேயன்றிப் பிறிதொன்றுமில்லை. துன்பத்தினுடைய அரியபெரிய செய்கைகளை ஆராய்ந்தால், ஒருவன் எவ்வளவு உத்தம அறிஞனாயிருந்தாலும், சிறிய துன்பத்தையாவது அவன் மனதார அநுபவிக்காதிருந்தால் அவனை உண்மையான ஞானமும், அதில் உண்மையான பிடித்தமும் உள்ளவனென்று ஒருக்காலும் உண்மையாகவே நாம் உரைக்க ஒண்ணாது. (தொடரும்)

M. S. சுந்தரம் ஆச்சாரி,
மார்க்கயன்கோட்டை.

---

## தீ

ஸ்ரீமான் சி. சுப்பிரமணியபாரதி எழுதியது:—

தீ எங்கும் நிறைந்த பொருள்; அஃதில்லாத இடமில்லை. ஸூர்யன் பெரிய தீக்கோளமே யன்றி வேறில்லை. நக்ஷத்ரங்களும் அப்படியே. பூமி முதலிய க்ரஹங்களும் தீ யின்றி யிருக்கவில்லை. பூமியிலேயே மேல் தோடு சுமார் 10 அல்லது 12 மைல்தான் மண்ணும் நீருமென்றும், அதற்குள் எல்லையற்ற வெள்ளமாகத் தீக் குழம்பு ததும்பிக்கொண்டிருக்கிறதென்றும் சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

இங்ஙனம் எரிகின்ற தீயைத் தவிர, எரியாமல் எங்கும் அடங்கிக் கிடக்கும் தீயே அநந்தம். கல்லைப் பார்த்தால் அதில் தீ யில்லையென்று தோன்றுகிறது; அதை மற்றொரு கல்லுடன் உராய்த்துப் பார். குபீலென்று தீ வெளியேறும்.

மனிதனுக்குள்ளேயே தீ நிரம்பியிருக்கிறது. வயிற்றுக்குள்ளே போட்டதெல்லாம் ஜீர்ணமாவதற்கு நம்முள்ளேயிருக்கும் தீயே காரணம்.

தீ தான் மழை பெய்விக்கிறது. ஸூர்யனென்ற தீ வட்டத்தினின்றும் பிறக்கும் கதிர்களின் உஷ்ணத்தால் கடல் நீர் முதலியன நீராவியாக மாறி மேகங்களாகின்றன. பூர்வ காலத்து மஹாரிஷிகள் காலையில்

7024

எழுந்தவுடன் ஸூர்யனை வணங்கிவிட்டு, அடுத்தபடியாக ஹோமத்தில் வளர்க்கும் தீயை வணங்கினர்.

வேதங்களில் முதல் வேதமாகிய ரிக் வேதத்தின் முதல் மந்திரத் தீயைக் குறித்தது. "அக்நி மீடே புரோஹிதம்" என்று தொடங்குகிறது. (தேவர்களின் அணியல்) "முதல் வைக்கப்பட்டவனாகிய அக்நியை வேண்டுகிறேன்!" என்பது பொருள்.

தீ ஸகல யந்திரங்களையும் நடத்துகிறது. தீ விளக்காகி இரவில் காப்பாற்றுகிறது. தீ சோறு சமைத்துக் கொடுக்கிறது. தீ எல்லாவிதமான அசுத்தங்களையும் போக்கி விடுகிறது.

"தீயே மருந்து" என்று கீர்த்தி பெற்ற கிரேக்க வைத்தியனொருவன் சொல்லுகிறான். எந்தப் பொருளையும் நன்றாகக் கொதிக்க வைத்துத் தின்றால் அதுவே பத்தியம்.

நீரைக் கொதிக்கவைத்தால் அதன் அசுத்தங்களெல்லாம் நீங்கிவிடும்.

தீ மனிதனுடைய நாகரிகத்துக்கு மிகவும் துணைபுரிந்தது. காட்டில் இரவு வேளைகளில் துஷ்ட மிருகங்கள் வந்து தம்மைக் கவ்விக்கொண்டு போகாதபடி பூர்வகாலத்துக் காட்டு மனிதர் தம்மைக் காத்துக்கொள்வதற்குத் தீ வளர்ப்பதையே உபாயமாகக்கொண்டனர்.

வேதத்தில்மட்டுமேயன்றி, இதர மார்க்கஸ்தர்களின் நூல்களிலும் அக்நிக்கு உயர்ந்த ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பார்ஸிகருடைய மதமாகிய ஜாதுஷ்ட்ர மதத்தில் அக்நி பூஜையே ப்ரதான க்ரியையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. யூதர்கள் யேஹோவாவுக்கு ஹோமம் வளர்த்துத்தான் பூஜை பண்ணினார்கள்.

தீ எரிவது மிகவும் அற்புதமான காக்ஷிகளிலொன்று. அதனால்தான் கோவில்களில் விக்ரஹங்களுக்கு தீப, தூபங்கள் இத்தனை விஸ்தாரமாகக் காண்பிக்கப்படுகின்றன. தீபமாலைகளும், வளை தீபங்களும் வாண வேடிக்கைகளும் மனிதருக்கு ஆச்சர்யத்தையும் மகிழ்ச்சியையும் விளைவிக்கின்றன.

காட்டுத் தீயின் வியப்புக்களை வேதங்களும் காவ்யங்களும் மிகவும் ஆச்சர்யமாக வர்ணித்திருக்கின்றன. அமெரிகாவில் பெரிய காடுகள் தீப்பற்றி யெரியும் அற்புதத்தை அந்தப் பக்கத்தார்கள் மிகவும் ஆவேசத்துடன் வர்ணித்துப் பேசுகிறார்கள்.

தீ தான் மின் சக்தி; மின் சக்திதான் காந்த சக்தி. சலன சக்தி உஷ்ணமாக மாறும்; உஷ்ணம் மின் சக்தியாக மாறும்; அதுவே காந்த சக்தியாக மாறுவது. ப்ரக்ருதியின் சக்திகளெல்லாம் ஒரே ரூபமுடையன; அதாவது அக்நி ரூபம். அதன் ஆதி ரூபம் வேகம்.

யுத்த சக்திகளெல்லாம் அக்நிசக்திகளே துப்பாக்கியிலிருந்தும், பீரங்கியிலிருந்தும் உஷ்ணத்தின் வேகத்தாலேதான் குண்டு முன்சென்று தாக்குகிறது.

எரி மலையிலேதான் தீக்கொழுந்துகளையும் தீக்குழம்புகளையும் அவற்றின் பூர்வ வடிவத்திலே காண்கிறோம். ஸாதாரணப் பாறைகளெல்லாம் தீயில் எரிந்து குழம்பாகிய மண்பிண்டங்களே. தீ முன்பு பூமியை

சிகரத்திலும் பிடித்திருந்தது. கால க்ரமத்தில் பூமி குளிர்ச்சி அடைந்துகொண்டுவருவதால் இப்போது அதன் மேல்தோடு மாத்திரம் குளிர்ந்துபோயிருக்கிறது.

சலனத்தாலே, அக்னி பிறக்கும்.

அக்னி யிருந்தால் மரணம் கிடையாது. மனிதர் உயிரைப் பாதுகாக்க விரும்பினுல் அதில் எப்போதும் இயக்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். யந்திரத்தைப் போன்ற சரீரத்தை நாம் யந்திரத்தின் காவலாளிபோல் நடத்தாமல் மமகாரத்தின் பிகுதியால் இயக்கமின்றிக் காக்க விரும்புகிறோம். விறகுவெட்டி கூடக் கட்டாயத்துக்காக உழைக்கிறுனேயொழிய உயிரை அறிவால் ஒழுங்குப்படி சோர்வின்றி இயக்கிக்கொண்டிருக்க வேண்டுமென்ற தீர்மானத்தின்படி செய்யவில்லை. புஸ்தகமெழுதுகிறவன்கூட ஆரம்பத்தில் ஓரிரண்டு வருஷம் தன் ஸுகத்துக்காக எழுதுகிறுன். பிறகு போகப் போகக் கடனுக்குச் செய்வதுபோல், ரூபாய் ஸம்பாதிக்கும் பொருட்டு மாத்திரமே எழுதத் தொடங்குகிறுன். பணம் வர வழியில்லாவிட்டால் எழுதாமலிருப்பதே விசேஷமென்று நினைக்கிறுன். நாம் தண்டத்துக்காகச் செய்யாமல் யதார்த்தமான மகிழ்ச்சியுடன் உயிரை இயக்கிக் கொண்டிருப்போமாயின் அதிக ஜீவாக்னி மாறுமலிருக்கும்.

அத்வைத ஞானம் ஏற்படுவதற்கு முதற்படியாக ஒவ்வொருவனும்: "நானே தீ", என்று த்யாநஞ் செய்யக்கடவன். சித்தத்தில் அக்னியை நிறுத்தினுல் மற்ற தேவர்களெல்லாரும் தாமே வந்து சேர்வார்களென்றது வேதம்.

---

## தொழிற்குறிப்புகள்.

I. ஸென்ஸேன் (தாம்பூல குளிகைகள்)

| | | |
|---|---|---|
| 1. | எக்ஸ்ராக்ட் ஆப் லிக்குவாரிஸ் (Extract of Liquorice) | 6-அவுன்ஸ் |
| 2. | தண்ணீர் | 6 ,, |
| 3. | கேட்சு (Catechu) | 2 ,, |
| 4. | விளாம்பிசின் (Gum Arabic) | 1 ,, |
| 5. | மாஸ்டிக் (Mastic) | 1 ட்ராம் |
| 6. | காஸ்கரில்லா (Cascarilla) | 1 ,, |
| 7. | கட்டைசுட்டகரி (Vegetable Charcoal) | 1 ,, |
| 8. | ஆரிஸ் ரூட் (Orris root) | 1 ,, |
| 9. | பெப்பர்மின்ட் ஆயில் (Oil peppermint) | 1 ,, |
| 10. | எஸ்ஸென்ஸ் அம்பர்கிரிஸ் (Essence Ambergris) | 10 துளி |
| 11. | கஸ்தூரி எஸ்ஸென்ஸ் (Essence Musk) | 10 ,, |

3

முதலில் தண்ணீரில் எக்ஸ்ட்ராக் லிக்குவாரிஸ் போட்டு கரையும் வரையில் கொதிக்க வைத்து, பின்னர் 3, 4 சரக்குகளை தூளாகச் செய்து அதில் சேர்த்து பாகாகும் வரையில் கலக்கவும், பிறகு 5, 6, 7, 8 இவைகளையும் தூள்செய்து அதோடு போட்டு ஒரு கண்ணாடித்துடுப்பினுல் கிளறி அடுப்பிலிருந்து எடுத்துவிடவும். கடைசியாக 9, 10, 11 எண்ணெயை சரக்குகளைச் சேர்த்து முன்னுலேயே ஆலீவ் எண்ணெய் தடவப்பட்ட ஒரு வழவழப்பான சலவைக்கல்லின்பேரில்வைத்து (அப்பளாம் போடுவது போல) நீளக்கம்பிபோல் திரட்டி சிறுசிறு பில்லைகளாகச் செய்து இதற்காகச் செய்யப்பட்டுள்ள சிறு நேர்த்தியான காகிதப்பைப

களில் வைத்து வியாபாரத்திற்கு அனுப்பவும்.

II பிரான்ஸ் பவுடர் (Bronze Powder)

(a) தங்கவர்ணப்பொடி:—

| | | |
|---|---|---|
| செப்புத்துரு (Verdigris) | 16-அவுன்ஸ் | |
| டட்டிபவுடர்(Tutty Powder) | 3 | ,, |
| வெண்காரம் (Borax) | 4 | ,, |
| பொட்டுலுப்பு (Nitre) | 4 | ,, |
| பைக்குளோரைட் ஆப் மெர்குறி (Bichloride of Mercury) | 4 டிராம் | |

இவைகளைப் பொடிசெய்து எண்ணெய் சேர்த்துக் குழப்பிக் கொதிக்கவைக்கவும். ஆறினதும் மெல்லிய தகடுகளாகச் செய்து தூள் செய்துவிடவும்.

(b) வெள்ளிவர்ணப் பொடி:—

| | | |
|---|---|---|
| பிஸ்மத் (Bismuth) | 2 அவுன்ஸ் | |
| டின் (Tin) | 2 | ,, |

இவ்விரண்டையும் உருக்கி இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ் பாதரசத்தைச் சேர்த்து ஆறினதும் தூள் செய்யவும்.

III தார்சோப் (Tar Soap)

| | |
|---|---|
| தார் (Tar) | 1-பாகம் |
| லிக்கர் பொட்டாஸ் (Liquor Pottasse) | 2-பாகம் |
| சோப் சீவிய தூள் | 2-பாகம் |

மூன்றையும் ஒன்று சேரும்படி கலக்கவும்.

IV இங்கிமாத்திரை (Ink pills)

| | |
|---|---|
| கடுக்காய்த் தூள் | 4-அவுன்ஸ் |
| அன்னபேதி | 10-ட்ராம் |
| துத்தம் | 30-கிரேயின் |
| படிக்காரம் | 2-ட்ராம் |
| கல்கண்டு பொடி | 3-ட்ராம் |
| விளாம்பிசின் | 5 ட்ராம் |
| கிரீம் ஆப் டார்டார் (Cream of Tartar) | 30-கிரெயின் |

இவைகளைத் தண்ணீர் விட்டு கட்டியாக அரைத்து உருட்சியாகத் திரட்டிச் சிறிய பில்லைகளாகச் செய்து உபயோகிக்கலாம்.

---

## பக்தி

(173-வது பக்கத் தொடர்ச்சி)

மற்றையர்க்குப்பணிசெய்வதில் தேகமழிந்தால் அதைப்போலொரு மேலான செய்கையில்லை. பெரியோர் என்றும் மற்றோர்க்காகத் தமது உடம்பைக் கொடுக்க ஆயத்தமா யிருப்பர். போகவேண்டிய உடம்பு நற்காரணமாகப் போனால் மிக நன்றாம். ததீசி முதலியோர் இதற்கு உதாரணமாம்.

வாணாளைச் சகல பிராணிகளுக்கும் பிரயோஜனப்படும்படி வைத்தல் மிக உயர்ந்த பிரயோசனமாம். உலகத்தில்பெருங்கோயில்கட்டுவிக்கிறார்கள். உன்பேரில்பெருந்தருமஞ் செய்கிறார்கள். யானோ எளியன்-எனது உடலையே உன்பாதத்தில் வைக்கிறேன், என்னை விட்டுவிடாதே-என்பது பக்தனது வசனமாகும்.

ஒன்றை வேண்டிப் பக்திசெய்தல் கூடாது. அது வியாபாரமாய் முடியும். அதி உயர்ந்த பொருளுக்கே பக்திசெய்யவேண்டும். அதாவது, அப்பொருளுக்கு மேலானபொருளொன்றுமில்லாதிருக்கவேண்டும்.

அழகு, மேன்மை, வலிமை இவற்றின் மிக மேலான சொரூபமே கருணைக்கடலாகிய கடவுள் என்றுணருகிறோம். சமஷ்டியாய் அன்புசெய்தலே பராபக்தியென்பது.

சாந்தமென்றும், தாஸ்யமென்றும், வாத்சல்யம் என்றும், சக்யம் என்றும், மதுரம் என்றும் பக்தி ஐவகைப்படும். மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரமென்றும் ஒரு வகுப்புண்டு. தாஸ்யபக்தி யென்பது எஜமானிடம் வேலைக்காரனுக்கு இருக்கும் பக்தி. அதற்குதாரணம் ஸ்ரீராமரில் அனுமானுக்கு இருந்த பக்தியாகும். வாத்சல்ய என்பது புத்திரனில் பிதாவுக்கிருக்குமன்பு. இதில் பயமின்மையும் கைம்மாறின்மையுமின்றியமையாதன. கண்ணப்ப நாயனுருக்கிருந்த பக்தியை இதற்குதாரணமாகச் சொல்லலாம். சக்ய பக்தி ஒருசிநேகனில் வைக்கும் பக்தி. இதற்கு ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனுருக்கு இருந்த பக்தியெனலாம். மதுரபக்தி மிகமேலானது, தலைவன் தலைவிக்குள்ள அன்பு அதுவும் சோரமானது இன்னும் உயர்ந்தது. இது ஸ்ரீமன் மாணிக்கவாசக சுவாமிகளுக்கிருந்த பக்தி யெனலாம்.

பக்திசெய்வோனை உலகத்தார் பயித்தியக்காரனென்பது வழக்கம். அதற்கு பக்திமான் சொல்லும் மறுமொழியாவது—உலகம் முழுதும் ஒரு பித்தர் வைத்தியசாலை; சிலர் பணத்துக்காசைகொண்டு பித்தராய்த் திரிகிறுர்கள். சிலர் நிலத்துக்கும் சிலர் கீர்த்திக்குமாகத் திரிகிறுர்கள். யானே கடவுளைத் தேடிப் பித்தனுய்த் திரிகிறேன். அந்தக் கருத்துப்படி யானும் ஒரு பயித்தியக்காரன்தான் என்பதாம்.

பக்திசெய்யு மாரம்பத்தில் பிறர் பரிகாசஞ் செய்வதால் அப்பக்தி அழிந்துபோகுமாகையால் ஆரம்பத்தில் மிகப் பாதுகாப்பா யிருக்கவேண்டுமாம்.

உண்டாகும் பக்தியை யோம்பல் மரக்கன்றை
யுண்டாக்க வேலியிட் டற்று.

பக்தி வளர்ந்தபின் அது பிறரால் அழிபடாம லிருப்பதன்றிப் பிறருக்கு நிழல் கொடுக்கும் மரம்போலப் பிறருக்கும் பக்தியை யுண்டாக்கும்.

லௌகீகர் நீரிற்கிடக்கும் கற்பாவைக்கும், பக்தர் நீரிற்கிடக்கும் சீலைப்பாவைக்கும், முக்தர் நீரிற்தோய்ந்த உப்புப்பாவைக்கும் உவமிக்கப்படுவர். கற்பாவை லட்சம் வருஷம் நீர்க்குள் கிடந்தாலும் நீரை உட்கொள்ளாது. சீலைப்பாவை நீரை உண்டு உருவததை வைத்திருக்கும். உப்புப் பாவை உருவழிந்து நீருடன் சேர்ந்து சேர்ந்துபோம்.

நீரின்முப் பாவை நிகர்பெத்த பத்தர்முத்தர்
ஓரிற் சிலைகலைமற் றுப்பு.

---

## இந்திரலோகம் இதுவெனலாமோ ?

அமெரிக்காவிலுள்ள நியூயார்க் என்னும நகரில் எண்ணிறந்த போஜனசாலைக ளிருக்கின்றன. அவற்றில் ஒவ்வொன்றும் ஒரு பெரிய அரண்மனையைப் போன்று, இருபது இருபத்தைந்து மேன்மாடிகளைக் கொண்ட கட்டத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ஒருவன் கீழே இருந்து மேன்மாடிகளுக்கு செல்லவேண்டுமாயின் ஒரு ஏற்றத்தில் உட்கார்ந்துகொண்டால், அது மின்சாரத்தின் வல்லமையால் அடுத்த நிமிஷத்தில் விரும்பிய மேன்மாடியிற் சேர்க்கும். மேலே உயர்த்தும் அத்தகைய ஏற்றம் ஒவ்வொரு மாடியிலும் உண்டு. அங்கங்கு நூற்றுக்கணக்கான அறைகளும், கோடி

சூரியப்பிரகாசம்போல மின்சார விளக்குகளு மிருக்கின்றன. ஒரு போஜன சாலையில் ஒரே காலத்தில் நாலாயிரம் மனிதரு மிருக்கலாம். என்றாலும் கூட்டமென்பதே காணப்படாது. ஒரு அறையிலுண்டாகும் ஓசை மற்றோரறையிற் கேளாது. எங்கும் அமைதியும் சுகமுமே தோன்றும். குளிர் காலத்தில் அந்த மாளிகைகளின் ஒவ்வொரு பாகமும் நீராவியால் சூடாக்கப்படுகின்றன. கோடைகாலத்திலோ மிகக் குளிர்ச்சியுள்ளனவாய்ச் செய்யப்படுகின்றன. சொற்பமும் அழுக்கு காணப்படாத போஜன அறைகளும், மனதைக்கவரும் சிற்றுண்டி நிறைந்த விடங்களும், சோபாக்களும், நிலைக் கண்ணாடிகளும், புஷ்பத் தொட்டிகளும், கீழே விரிக்கப்பட்டுள்ள இரத்தினக் கம்பளங்களும், தொங்கல்களும எங்கும் நிறைந்திருக்கும்.

இவ்வித போஜனசாலை யொன்றில் தங்கும் பொருட்டு ஒருவர் காலை 9-மணிக்கு அதன் முதல்வாயிலுக்கு வருவதாகக்கொள்வோம். அங்கு டவாலியோடு நிற்கும் வாயில்காப்போன் அவர் முன்குனிந்து வணக்கம் செய்து, அவரிடத்திலுள்ள சாமானக்கைக்கொண்டு, ஒரு எலக்டிரிக் பொத்தானை அழுத்துவான். உடனே உட்புறத்திலிருந்து இன்னொரு வேலையாள் ஓடிவந்து வணக்கத்துடன் அம்மூட்டையை வாங்கிக் கொண்டு, அவரை உள்ளே அழைத்துப் போய் விடுதி குமஸ்தா விருக்குமிடத்திற்குச் செல்வான். ஒருவர் இருப்பதற்குத் தேவையான படுக்கை அறை ஸ்நான அறை, போஜனகூடம் முதலியவற்றைக் கொண்ட ஒருவிடுதிக்கு ஒரு நாளைக்குக் குடிக்கூலி இருநூறுரூபாய்முதல் ஐந்நூறு ரூபாய்வரையில் பலவகைப்பட்டதா யிருக்கிறது. பெருத்த பிரபுக்களுக்குத் தேவையான தனிவிடுதிகளுக்கு ஒரு நாளைக்குக் குடிக்கூலி ரூபாய் எழுநூறு. விடுதி குமஸ்தாவிடம் அம்மனிதர் தமக்குத் தேவையான விடுதியைக் குறிப்பிட அவன் உடனே அவருடைய பெயரைப் பதிவுசெய்துகொண்டு, அவருடன் வந்த ஆளிடத்தில் ஒரு துண்டுக்காகிதத்தைக் கொடுப்பான். அவருக்கு அந்த போஜன சாலைவிலாசத்திற்கு ஏதாயினும் கடிதமோ தந்தியோ வருவதாக அவர் எதிர்பார்க்கும்பக்ஷத்தில் அவன் அருகிலுள்ள தபால் குமஸ்தாவிடம் சென்று அவருக்கு வந்துள்ள தபால்களை வாங்கி வந்து தருவான். உடனே அவர் மேலே ஏற்றும் எலக்ட்ரிக் பீடத்தினால் எந்த மேன்மாடிக்கு போக வேண்டுமோ அங்கு சிலநொடிகளில் போய்ச் சேருவார். உடனே அந்த வேலைக்காரன், ஆங்கிருக்கும் மேன்மாடிக் குமஸ்தாவினிடம் (அக்குமஸ்தா பெண்பாலினள்) அந்தத் துண்டுக்காகிதத்தைக் கொடுப்பான். அவளுடைய வேலை என்னவென்றால், தன் மாடியிலிருக்கும் அறைகளில் தங்கும் மனிதருக்கு என்னென்ன தேவையாகின்றனவோ அவற்றைக் கொடுப்பதேயாம். அது எளிதானகாரியமன்று. அங்கு வசிப்போரின் சொக்காயிலிருந்து கீழே விழும் பொத்தானைத் தைத்தல் முதல், அவரைப் பார்க்க வரும் நண்பரை அவரிடம் சேர்ப்பது வரையில் யாவும் அவளுடைய காரியங்களே.

அவர் தம்முடையவிடுதியில் சௌக்கியமாய் விடப்பட்டபின்னர், இன்னும் ஏதாயினும் தன்னால் ஆகவேண்டிய காரியமுண்டோவெனக் குமஸ்தா கேட்பர். அவருடைய மூட்டைகளை அவிழ்க்கவும், கட்ட

வும், ஓயாமல் அவர் கூப்பிடுவதற்குக் குரல்கொடுக்கவும் ஒரு ஆள் அவருக்கு வேண்டியிருந்தால் உடனே கொடுக்கப்படுவான். அறைதோறும் ஓர் விளம்பரம் காணப்படும். அதில் "காலை10-மணிக்குள் உடைகள் கொடுக்கப்பட்டால் அவைகள் மாலைக்குள் சலவைசெய்து கொடுக்கப்படும்" என்று எழுதப்பட்டிருக்கும்.

அவ்விடுதியின் ஒருமூலையிலுள்ள டெலிபோனிற்குச் சென்று அந்த மாடிகுமஸ்தாவாகிய பெண்ணிடம் சொன்னால், அவள் உடனே சலவை குமஸ்தாவை அழைத்து விஷயத்தை தெரிவிப்பாள். அங்கிருந்து ஒரு பெண் உடனே அவருடைய அறைக்குவந்து சலவை செய்யப்படவேண்டியவற்றைக் கொண்டுபோய் மீண்டும் மாலையில் மிக்க நேர்த்தியாய்ச் சலவைசெய்து கொண்டுவந்து கொடுத்துப்போவாள்.

அங்கிருக்கும் மேஜையில் நேர்த்தியான தந்திகொடுக்கும் பாரங்கள், வெற்றுக்காகிதம், கவர், கார்டு, மை ஒற்றுங் காகிதம், மை, பலவிதமான பேனாக்கள் முதலிய யாவும் வைக்கப்பட்டிருக்கும். அவர் தம்முடைய தபால்களைப் படித்து, அவற்றிற்குத் தந்திமூலமாய் மறுமொழிகள் அனுப்ப விரும்பினால் தந்தியை எழுதி, அதை அனுப்பவேண்டுமென்று டெலிபோன் மூலமாய்ச் சொன்னதும் ஒரு ஆள் அங்குவந்து தந்திகளை வாங்கிக்கொண்டுபோவான். அந்த போஜனசாலைக்குள்ளேயே சர்க்கார் தந்தி ஆபீஸ் வைக்கப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டுபோய் இரண்டொரு நிமிஷத்திற் சேர்க்கிறான். அன்றி, அவரே நேரில் மேன்மாடிகுமஸ்தாவிடம் அவற்றைக் கொணர்ந்து கொடுத்துத் தந்தியாபீசுக்கு அனுப்ப விரும்பினால், அவள் அதை உடனே ஒரு பெட்டியில் வைத்துப்பூட்டி, மேலேயிருந்து தந்தியாபீசுக்கு எலெக்ட்ரிக் ஏற்றத்தினால் அனுப்பிவிடுவாள். எவ்விதத்திலும் அவர் தந்தி எழுதிய இரண்டொரு நிமிஷங்களில், அது விலாசதாருக்குப் போய்க்கொண்டிருக்கும்.

தேவையான உணவுகள் புகையிலைச்சுருட்டுகள் முதலியவற்றிற்கு டெலிபோன் மூலமாய் அவர் சொல்வதுதான் தாமதம். உடனே தட்டுக்களில் யாவும் பிரசன்னமாகும். அந்த ஊரில் நடைபெறும் எல்லா நாடக டிக்கெட்டுகளும் அந்தப் போஜனசாலையிலேயே விற்கப்படும். அவர் தமக்குத் தேவையானதை டெலிபோனிற் சொன்னால், அது உடனே அவரிடம் வந்துசேரும். நாடகத்திற்குப் போய்த் திரும்பி வந்தால், அவருக்கு உடனே முதல் தரமான சிற்றுண்டிகள், பழவகைகள், காபி, டீ முதலிய மாதுரியமான உணவுகள் மேஜையின்மீது அழகாய்ப் பரப்பப்பட்டிருக்கும். அவற்றில் எதையுண்பதென்று நிச்சயிப்பதே பிரயாசை. போஜனக் கூடத்திலிருந்து அவர் தம் விடுதிக்கு வருவாராயின், அங்கு தமக்குத் தேவையான சௌகரியங்களில் ஒரு சிறிதும் குறைவின்றி ஏற்படுத்தப்பட்டிருக்கும். அவருடைய மெத்தை தலையணைகள் முதலியன அன்றே சலவை செய்யப்பட்ட உறைகள் போடப்பெற்றிருக்கும். படுப்பதற்கு ஆயத்தமாக மெத்தை பிரித்துவிடப்பட்டிருக்கும். அதன்மீது தலையணைகள் நேர்த்தியாய் வைக்கப்பட்டிருக்கும். மெத்தை தைக்கப்பட்ட சாய் நாற்காலியில் உட்கார்ந்து படிக்கும்பொருட்டு ஒரு நாற்காலியும் அதற்கண்டையில் ஒரு மேஜையின்மீது

விளக்கும்பொருத்தப்பெற்றிருக்கும். அவர் அலங்கோலமாய்ப் போட்டுவிட்டுப் போயிருந்த ஆடைகள் யாவும் நன்றாய் மடிக்கப்பட்டு அழகாய் வைக்கப்பட் டிருக்கும்; அவருடைய உபயோகத்திற்குத் தேவையான புதியவைகள் சுவற்று மூலைகளில் மாட்டப்பட்டிருக்கும்; அவருடைய அலங்காரத்திற்குத் தேவையான ப்ரஷ், சீப்பு, கண்ணாடி, தைலம் முதலியவை ஒரு இடத்தில் மிகவும் சுத்தமாகக் காணப்படும். அடுத்த ஸ்நான அறையில் துடைத்துக் கொள்ளத் துண்டுகள், கையலம்பும்சோப், உடம்பு தேய்க்கும் சோப், முதலியவை தயாராக வைக்கப்பட்டிருக்கும்.

அவர் இரவு 2-மணி ரயிலில் போகவேண்டுமென்பாராகில் $1\frac{1}{2}$-மணிக்கு அவர் எழுப்பப்படுவார். அவரெழுந்தவுடன் அவரிடம் ஒரு ரயில் டிக்கட்டும் அவரால் போஜனசாலைக்குச் சேரவேண்டிய பணத்திற்குப் பட்டியும் கொடுக்கப்படும். அவருடைய சாமான்கள் யாவும் ஒரு வண்டியில் வைத்துக்கொணர்ந்து ரயிலில்ஏற்றப்படும். ரயில் டிக்கெட், தந்திச்செலவுமுதலிய செலவுகள் யாவும் போஜனசாலையாராலேயே முதலிற் கொடுக்கப்படும். எல்லாம் ஒரே பட்டியில் அவரிடமிருந்து போஜனசாலைக் காரரால் வசூல் செய்யப்படும்.

போஜனசாலைகளில் மடைப்பள்ளித் தலைமைப் பரிசாரகனுடைய ஸ்தானமே மிக முக்கியமானது. அவனுடைய மாதச்சம்பளம் இரண்டாயிரம் ரூபாய் முதல் நாலாயிரம் ரூபாய் வரையில் போஜனசாலையின் சிறுமை பெருமைக்குத் தகுந்தவாறிருக்கிறது. அவனுக்குக்கீழ் சுமார் 50 முக்கிய உதவிக்காரரும், எண்ணூறுமுதல் தொள்ளாயிரம் வரையில் ஆண் பெண் சமையற்காரரும் வேலைசெய்கின்றனர். இத்தனை ஆட்கள் இருந்தும், சமையல் முழுதும் மின்சார இயந்திரங்களாற்செய்யப்படுகிறது. உருளைக்கிழங்கின் தோலை உரிப்பதுமுதல் தட்டுக்களை அலம்புவது வரையில் எதுவும் கைகளாற் செய்யப்படுவதில்லை. இயந்திரங்களின் உதவியாலேயே செய்யப்படுகின்றன.

---

## மின்சாரமும்—மின்னலும்.

(176-வது பக்கத்தொடர்ச்சி)

இடி மின்னல் இன்னதென்று 150 வருடங்களுக்குமுன் நமக்குத் தெரிந்ததல்ல. எலெக்ட்ரான் அல்லது ஆம்பர் என்னும் அரக்குபோன்ற ஒருவகை மரப்பிசினை கம்பளியில் தேய்த்தபோது இலேசான கடிதத்துண்டுகளை இழுக்கக்கூடிய விநோதச்சக்தி இத்துண்டுகளில் தோன்றியதைக் கண்டது முதல் இம்மாதிரியான சக்தி அநேக வஸ்துககளில் தேய்க்கும் போது தோன்றுகிறதென்று தெரியவந்தது. கண்ணாடிக் குழாயை ஒரு பட்டுத்துண்டு தேய்க்க இச்சக்தி தோன்றும். ஊற்றுப்பேனாவின் குழாயைக் கம்பளிச் சொக்காயின்மேல் தேய்த்துச் சன்னமாகக் கத்தரித்த காகிதத்துண்டுகளின் பக்கத்திலும், காய்ந்த சோளத்தட்டை அல்லது நெட்டி, கார்க்குத்தூள் இவைகளின் பக்கத்திலும் பிடித்தால் அவை குழாயின்மேல் தாவி ஒட்டிக்கொள்ளும். சில நிமிஷம் கழித்து கீழே உதிர்ந்துபோம். இவ்விதமாய்க் கடிதத்துண்டுகள் முதலியவற்றை இழுக்கும் சக்திக்கு எலக்ட்ரிஸிடி என்று பெயர் வைத்தார்கள். அதி வேகமாய்த் தேய்ப்பதற்கும், யுக்தி ஆலோசனைகள் பண்ணிப் பெரிய கண்ணாடித் தகடுகளாலும் உருளைகளாலும் யந்திரங்களைச் செய்து இச்சக்தியின் குணங்களைக் கற்

றார்கள். அதிகமாகச் சேகரித்தபோது பளிச் என்னும் மின்னல்போன்ற வெளிச்சத்தையும் படீர் என்ற சப்தத்தையும் கண்டதுமுதல், ஆகாயத்தில் தோன்றும் மின்னலும் இடியும் இம்மாதிரியான சக்தியினாலேதான் உண்டாகிறதென்று ஊகித்தார்கள். பிராங்க்லின் என்னும் சிறந்த ஞானி ஒரு காற்றாடியை ஆகாயத்தில் பறக்கவிட்டுப் பட்டுக்கயிற்றால் கீழ் ஓரத்தை ஒரு கட்டையில் கட்டிவிட்டு அவ்வோரத்தில் ஒரு இரும்புத் திறவுகோலைத் தொங்கவிட்டுவைத்தார். அத்திறவுகோலை அடிக்கடி தொட்டுப்பார்த்தார்; ஆகாயத்தில் எலக்டிரிஸிடி இருந்ததனால் இரும்பில் கயிற்றின்வழி இறங்கி சேர்ந்து தொட்டவுடன் பளிச் என்னும் வெளிச்சம் தோன்றுமென்று அவர் கூறினார். அக்கயிறு உலர்ந்திருந்த வரையிலும் தோன்றாமல், சிறுமழைத்துளிகள் விழுந்து அது நனைந்ததும் மின்னல்போன்ற வெளிச்சம் திறவுகோலைத் தொட்டபோதெல்லாம் தோன்றியது. அது எலெக்ட்ரிக் யந்திரங்களில் தோன்றிய வெளிச்சத்தைப்போலவே இருந்ததால், ஆகாயத்தில் மின்னலுக்குக் காரணமான சக்தியும் எலெக்டிரிஸிடியும் ஒரு வகையதே என்று ஸ்தாபித்தார். காற்றாடியைப் பறக்கவிட்டுப் பரீக்ஷித்து ஆகாயத்தில் எப்போதும் மின்சாரம் இருக்கிறதென்றும், உயரமாகச் செல்லச்செல்ல அது அதிக தீக்ஷணியமாகப் பரவி இருக்கிறதென்றும் அதனால்தான் மின்னல் உண்டாகிறதென்றும், அப்படி மின்னல் தோன்றியபோதெல்லாம் ஆகாயத்தில் அம்மின்னல் தோன்றிய பிரதேசத்தில் சேர்ந்திருந்த மின்சாரசக்தி போய்விடுகிறதென்றும் கூறப்படுகிறது. யந்திரங்களினால் நாம் சேகரிக்கக்கூடிய மின்சாரத்தை அதிகமாகச் சேகரித்ததில், மின்னல் இடிகளில் உண்டாகும் கெடுதிகளைப்போலவே மனிதர்களைக்கொல்லவும் வஸ்துக்களை உடைக்கவும் வேண்டிய சக்தி யந்திர மின்சாரத்திற்கும் உண்டாகிறதென்றும், ஆகாய மின்சாரமும் யந்திர மின்சாரமும் விசிறிக்காற்றும் புயல்காற்றும்போலவும் சமுத்திரத்திலுள்ள ஜலமும் ஏரியில் உள்ள ஜலமும்போலவும் அளவில்மட்டும் வித்தியாசப்பட்டவையேயன்றி குணத்தில் ஒன்றேயென்று அறியப்படுகிறது.—தமிழர்நேசன்.

---

## ஏன் புலால் உண்ணலாகாது?

### பத்துக் காரணங்கள்.

"ஹிரால்டு ஆப் தி கோல்டன் ஏஜ்"! என்னும் ஆங்கிலமாதப் பத்திரிகையின் பிரதமதலைவரான மிஸ்டர் விட்பியோர்டு என்பவரால் ஆங்கிலத்தில் பிரசுரித்துள்ள துண்டுப் பத்திரத்தினின் றெடுக்கப்பட்டது.

1. மாமிச ஆகாரம் மனிதனுக்கு இயற்கையானதல்ல; அவனது இயற்கைக்கு விரோதமானது. 'நமது பிரபல வைத்தியர்களும் தாவர சங்கம சாஸ்திரிகளும் நமது சரீர அமைப்பு பழவர்க்கங்களைச் சாப்பிடுவதற்குரியதென்றும் மாமஸ பட்சணஞ்செய்யும் பிராணிகளின் சரீர அமைப்புக்களை ஒத்திருக்கவில்லையென்றும் ஒருங்கே கூறுகின்றனர். ஆதலால், பிராணிகளின் மாமிஸத்தைச் சாப்பிடுவது நம்மைச் சிருஷ்டித்த கடவுளின் நோக்கத்திற்கும் விருப்பத்திற்கும் மாறாயிருக்கின்றது. ஒவ்வொருகாலத்தில் தோன்றி இவ்வுலகத்தை அலங்கரித்த தத்துவ ஞானிகளின் உபதேசங்களும் இதனை உறுதிப் படுத்துகின்றன.

2 மாமிஸ ஆகாரம் மனிதனுக்கு அனாவசியமானது. மனித ஜாதியாரில் பாதிப்பேர் மாமிஸம் சாப்பிடுவதில்லை. (ஸ்பார்ட் டானியர், ரோமர், அரபியர், ஜப்பானியர் முதலிய) பெருஞ் சக்தி வாய்ந்த அநேக ஜாதியார் மாம்ஸம் சாப்பிடாதிருந்தனர். இப்பொழுதுங் கூடச் சரீரவன்மையில் மேம்பட்டவர்களென்று உலகத்தில் பிரசித்தி பெற்றுள்ள பலர் சாகபட்சணிகளே யாவர் (கலியுக வீமசேனன் என்று

உலகமெங்கும் பிரக்யாதி பெற்றுள்ள ராமமூர்த்தி ஸாக பட்சணியே யன்றோ?) அமெரிக்காவிலுள்ள எல் (Yale) ஹார்வார்டு (Harvard) சர்வ கலாசாலைகளில் பண்டிதர் சிட்டெண்டென். இர்விங் பிஷர் முதலியோரும், லண்டனில் பிரசித்திபெற்ற டாக்டர் ஜோஸப்ஒல்டுபீல்டு அவர்களும், பிரஸல்ஸில் சர்வகலாசாலை அதிகாரிகளும் இது சம்பந்தமாகப் பரிசோதனைகள் செய்து பார்த்தனர்; அவர்கள் மாம்ஸ ஆகாரமின்றிப் பால், பழவர்க்கங்கள், தான்ய வர்க்கங்களென்னு மிவற்றைச் சாப்பிடுவோர் மிகுந்த சௌக்யமும், மிகுந்த சக்தியும் கஷ்டங்களைப் பொறுக்கும் ஆற்றலும் உடையவர்களாக விருக்கின்றனரென்று உறுதிசெய்தனர். முற்காலத்தில் பலவேறு மனோ முயற்சிகளையும் சரீரமுயற்சிகளையுங் கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மேதாவிகள் கூறியுள்ள உண்மைகளும் இவ்விஷயங்களை உறுதிப்படுத்துகின்றன.

3. மாம்ஸ ஆகாரம் ஸரீர சௌக்கியத்திற்குப் பாதகமாயுள்ளது; அஃதுள் அபாயகரமாயுள்ளவை நமக்குண்டாகும் அநேகங் கொடியவியாதிகள், பிளவைகள், சூலை, வாதரோகம், ஒருவகை மூத்ரரோகம், க்ஷயரோகம் முதலியன மிருகங்களின் சரீரங்களைச் சாப்பிடுவதன் நேரான பயன்களேயாகும். மிருகங்கள் பெரும்பான்மையும் பற்பல வியாதிகளை யுடையனவாயிருக்கின்றன; அவை சுகஜீவியா யிருக்கும் பொழுது கூட எப்பொழுதும் நவச்சார வாயு முதலிய விஷ வஸ்துக்கள் கலந்தனவாகவேயிருக்கின்றன. இதனால் அவற்றைக் கொன்று புசிப்பவருக்கு மேற்கூறிய வியாதிகள் சம்பவிக்கின்றன. இங்கிலாந்திலுள்ள ஆடுமாடுகளும் 100-க்கு 50-க்கு மேற்பட்டவை (Tubercles) மணிக்குடல் ரோகமுள்ளவையாயிருக்கின்றன. சிலந்திப் புண்கள் (பிளவை) ஆந்த்ராக்ஸ், கால்நோய், வாயநோய் முதலிய பற்பல புழுக்களும் உண்ணிக்களும் அவற்றின் சரீரத்தின் மீது வசிக்கின்றன. மிகப்பெரியபட்டணங்கள் தவிர (அங்கும் சரியாய் நடப்பதில்லை) மற்ற விடங்களிலெல்லாம் டாக்டர்கள் மாமிச பரிசோதனை செய்வதில்லை. பொதுஜனங்கள் இவற்றை யெல்லாம் அறியாமையால், எச்சில்போன்ற மாமிசங்களைத் தின்றுகொண்டிருக்கின்றனர்; தங்கள் குழந்தைகளுக்கும் இவற்றைச் சாப்பிடுமாறு கொடுக்கிறார்கள்; அதனால் மிகுந்த கேடுகள் சம்பவிக்கின்றன.

4. (இருதய ரோகம்) என்னும் கொடிய வியாதி உண்டாவதற்கு மாமிசபட்சணமே முக்கிய காரணமா யிருக்கின்றது. மாமிசபட்சணமில்லாத நாடுகளில் குடி மிகுதியாயில்லை. பழவர்க்கங்களை யுண்டு வாழும் சாக பட்சணிகள் மதுபானஞ் செய்து மிகுதியாயில்லை; டிப்ஸமோனியா வியாதியா யுள்ளவர்கள் பழவர்க்கங்களை மாத்திரம உண்டு ஜீவிப்பதால், மேற்படி வியாதி போய்விடுகின்றதென்று இரட்சண்ய சேனையைச் சேர்ந்தவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

5 நமது வறுமைக்கும் குற்றங்களுக்கும்முக்கிய காரணம் குடிமுதலிய கெட்ட வழக்கங்களே யாம். இவற்றை அநேக ராஜதந்திரிகளும் சாஸ்திரிகளும் உறுதிப்படுத்துகின்றார்கள். அதனால் இவ்விதத் தீமையெல்லாம் வாராமல் பாதுகாக்குமாறு ஆகாரத்திருத்தம் செய்யவேண்டியது அவஸ்யமாம். உற்சாகத்தை மிகுதியும் உண்டாக்கக் கூடியனவல்லாத கிழங்குகள், கொட்டைகள், பருப்புகள், கோதுமை அரிசி, பயறுகள் பலவகையான பழவர்க்கங்கள், பால், பாற்கட்டி, மோர், தயிர் முதலிய சத்தான வஸ்துக்களைச் சாப்பிடுவோர்க்குக் குடிக்க வேண்டுமென்னும் ஆசை யுண்டாவதில்லை.

6 மாமிச ஆகாரம் தன்னைச் சாப்பிடுகின்றவரை முரட்டுக்குண முள்ளவர்களாயும், அடிக்கடி சண்டையிடுஞ்சுபாவமுள்ளவர்களாயும் ரத்தப்பிரிய முள்ளவர்களாயும் ஆக்கிவிடுகின்றது; ஆனால் சாகபட்சணம் செய்யும் ஜாதியாரோ எக்காலத்திலும் சமாதானமும் சாதுத்தன்மையுமுள்ளவர்களென்றுபேர்பெற்றிருக்கின்றார்கள். இப்பொழுது மீண்டும் உலகத்தார் மனிதருக்கு இயற்கையான சாகபதார்த்த உணவைக் கொ

ள்ளின், உலகத்தில் யுத்தவிருப்பம் அடியோடொழிந்து போம். சாகபதார்த்த உணவையே யாவரும் உண்டுவந்தால் அஃது இனி வரப்போகின்ற சர்வ ஜீவ ஐக்கியமும் சகோதரத்துவமும் பொருந்திய புதிய காலத்தை விரைவில் வருமாறு செய்யும்.

7 மாமிச ஆகாரம் சாப்பிடுவதால் ஒவ்வொரு தேசத்தினும் தினந்தோறும் குறைந்த பட்சம் சுமார் 10-லட்சம் பிராணிகள் (ஈவிரக்கம் ஜீவகாருண்யம் என்னு மிவையன்றி) கொடுமையாகக் கொலை செய்யப்படுகின்றன. அதனால் வாயில்லாப் பிராணிகளுக்குக் கொடுந்துன்பமும் துயரமும் ஏற்படுகின்றன. அத்தகைய கொடுவதைக்கும், துன்பத்திற்கும் ஏதுவான மாமிஸபட்சணம் முற்றிலும் அநாவஸ்யமாம். தெய்வநீதியின்படி மாமிஸபட்சணம் செய்வது நியாயமுள்ளதாகாது. மாமிஸபட்சணம் ஜீவகாருண்யத் தன்மைக்கும் உண்மையான மத நீதிகளுக்கும் முரணானதாம். ஆடுமாடுகளை தினந்தோறும் ஆயிரக்கணக்காகக்கொன்று புசித்துவருவதால், ஆடுமாடுகள் க்ஷீணதசையடைந்து வருகின்றன; அதனால் தேசத்தில் விவ்சாயத் தொழிலுக்குக் கஷ்டம் நேரிடுகின்றது; பால் மோர் நெய் முதலியன கிடைப்பதும் கஷ்டமாகின்றது:

8. மாமிச பட்சணஞ் செய்யும் வழக்கம் ஆயிரக்கணக்கான ஸ்திரீபுருஷரும் சிறுவர்களும் மிருகங்களை நினைக்கக்கூடாதவண்ணம் கொடுமையாக வெட்டி வதைசெய்தல்முதலிய கேவலமான வேலைகளைச் செய்வதால், அவர்களைக் கேவலமானவர்களாயும் கொடுமையான மிருகத்தன முள்ளவர்களாயும் செய்து விடுகின்றது. அஃது அவர்களது பின் சந்ததியாரிடத்திலும் பெருந் தீமைகளையும் கொலைபாதகத் தன்மையையும் உண்டுபண்ணுகின்றது. அதனால் அது பொதுவாக ஜனசமூகத்திற்கே மிகுந்த கஷ்டத்தையும் நஷ்டத்தையும் உண்டுபண்ணுகின்றது.

9 இயற்கையானதும் மாமிஸ பட்சணமல்லாததுமான (சாகபதார்த்த) ஆகாரத்தைக் கைக்கொள்வது விவசாயத் தொழில் முயற்சி மிகுதியாகச் செய்யும்படி செய்வதற்குக் காரணமாகின்றது. ஆடுமாடுகளை வளர்ப்பதை விட, நிலத்தில் கனிவர்க்கங்கள் தரும் விருக்ஷஜாதிகள், பலவகைத் தானியங்கள், காய் கறிகள் முதலியன சாகுபடி செய்வதில் மனிதர் முயற்சி செய்தால் அதனிலும் எட்டுமடங்கு மிகுதியான லாபம் கிடைக்கும். இதனால், இப்பொழுது வரவரப் பயங்கரமாக நாட்டுப்புறங்களில் ஜனங்களின் வாசம் குறைந்து வரும் கேடும் பட்டணங்களில் மூச்சுவிடவும் இடமின்றி ஜனக்கூட்ட மிகுதியாகிக்கொண்டு வரும் கேடும் நிவிர்த்தியாய்விடும். மீண்டும் பூமியை நாடுதலேற்படுமாயின், அது சோம்பேறிகள் அயோக்ய முதலிய தாழ்ந்த வகுப்பாரின் கஷ்டங்களையும் நமது ஜாதியாரின் தொழிலையும் நிவர்த்தி செய்வதற்குத் தக்க வழியாகும்.

10. மாமிஸ ஆகாரம் மனிதனது (ஆத்ம) ஞான வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் தடைசெய்கின்றது. அஃது அவனை ஸ்தூலசம்பந்தமான சிந்தனையையும் ஞானத்தையும் கொண்டிருக்குமாறு செய்துவிடுகின்றது; அதனால் அவனைக் கொடுமையுள்ளவனாகவும், குரூரமுள்ளவனாகவும். திருடுந் தன்மையுள்ளவனாகவுஞ் செய்து அவனது ஞானதிருஷ்டியை மறைத்துவிடுகின்றது. ஆகலின் இந்த ஆகாரத் திருத்த முயற்சியைச் சகல மதாபிமானிகளும் பரோபகார சீலர்களும் சிந்தித்து ஆதரிக்கவேண்டியது அவஸ்யமாம். ஏனென்றால், அஃது எம்மதத்திற்கும் சம்மதமான ஜீவகாருண்ணிய நிலையை அடைவதற்குப் பெருந்தடையாயுள்ள கொலை பாவத்தை நிவிர்த்தி செய்கின்றது.

---

## விஸ்வேஸ்வர பகவான் கீர்த்தனை.

இந்த கீர்த்தனை பஜனை செய்பவர்களுக்கும் பாராயணஞ்செய்பவர்களுக்கும் தகுதியானது

விலை அணா 2.

விஸ்வகர்ம புத்தகசாலை.
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை

# ஆரோக்கியபோதம்.

## பற்களைச் சுத்தம் பண்ணுதல்.

தேகத்தைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுகிறவர்கள் தினந்தோறும் நன்றாய்ப் பற்களைச் சுத்தம்பண்ணவேண்டியது அவசியமே. இப்படிச் செய்யாவிட்டால் சுவாசிக்கிற ஆகாயம் அசுத்தமடைந்து நாற்றமுள்ளதாக, சுகத்திற்குப் பிரதிகூலமுண்டாகும். இத்தேசத்து ஜனங்களுள் பெரும்பான்மையோருக்கு நாடோறும் பற்களைச் சுத்தம்பண்ண வேண்டுமென்று சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆனால், அவர்களுள் அனேகர் செங்கற்பொடி, கரடுமுரடான சாம்பல் பலமுள்ள பற்குச்சி முதலானவைகளைக்கொண்டு தினந்தோறும் வெகுநேரமாகப் பற்களை முரட்டுத்தனமாய்த் தேய்க்கிறதினால் சிலவருஷ காலத்திற்குள் பற்களை மெதுவாய்த் தேய்ந்து போகச்செய்து, பின்னுக்குக் கொடிய வேதனைகளை வருவித்துக்கொள்ளுகிறார்கள்; அடுப்புக்கரியையாவது, அல்லது கொட்டைப்பாக்கைச் சுட்ட கரியையாவது மிகவும் சேர்த்தியான தூளாகப் பொடித்து, அந்தப் பொடியைக்கொண்டு பற்களை மெதுவாய்ச் சுத்தம்பண்ணினால் நலமாயிருக்கும். சில நாளைக் கொருமுறை கொஞ்சஞ் சீனக்காரம் அல்லது படிகாரம் முதலிய துவர்ப்புப் பதார்த்தங்கள் சேர்ந்த தண்ணீரினால் வாயைக்கொப்புளித்தால் பல் ஈறு முதலியவற்றிற்குப் பலமுண்டாம்.

## வஸ்திரம்.

மனிதன் தரிக்கும் வஸ்திரங்கள் தேசவித்தியாசம் காலவித்தியாசங்களுக்குத் தக்கபடி வித்தியாசப்பட்டிருத்தல் வேண்டும். அதிக குளிர்ச்சியுள்ள தேசங்களில் வாசம்பண்ணும் ஜனங்கள் மிருகங்களின் தோல்களினாலும்அவைகளின் கம்பளி மயிர்களினாலுஞ் செய்த உடைகளைத்தரித்துக்கொள்ளுவார்கள். உஷ்ண தேசங்களிலுள்ளவர்கள் பருத்தி, பட்டு முதலியவைகளாலாகிய வஸ்திரங்களை உடுப்பார்கள்.

ஜனங்கள் காலவித்தியாசத்திற் கேற்றபடி வித்தியாசமான துணிகளாலாகிய வஸ்திரங்களைத் தரிப்பது தேகசுகத்திற்கு அவசியமான காரியம். குளிர்ச்சி தேகத்தைத் தாக்காதபடிக்கு நன்றாய் விலக்கத்தக்கது பிளானெல் முதலிய கம்பளி மயிரினாலாகிய துணிகளே. இவைகளுக்கு இரண்டாவது பருத்திநூல் துணிகள். ஆலண்டு முதலிய சணல் நாரினால் செய்த துணிகள் குளிர்ச்சியைத் தாங்குவதற்கேற்றவைகளல்ல. நமது தேசத்தில் அதிக குளிர்ச்சியான காலங்களில் தவிர மற்றக் காலங்களிலெல்லாம் ஜனங்கள் தரித்துக்கொள்வதற்கேற்றது பருத்தி நூல் துணிகளே. அதிகக் குளிர்ச்சியான காலங்களில் கம்பளித்துணிவஸ்திரங்கள் போர்வைகள் முதலியவைகளை உபயோகப்படுத்துவது சரீரத்திற்கு ஆரோக்கியத்தை யுண்டாக்குகிறதுந்தவிர குளிர்ச்சியினால் சுவாசக் கருவிகள் ஜீரணக்கருவிகள் முதலியவற்றைப் பற்றின பல வியாதிகள் அணுகாதபடி விலக்கும்.

## உடைகளின் நிறம்.

வஸ்திரங்களின் நிறத்திற்குத் தகுந்தபடி உஷ்ணமானது தேகத்தைத் தாக்கும். வெள்ளைநிறத் துணிகளின்மேல் படுகிற காங்கையில் அதிகமானபங்கு உள்ளே செல்லாமல் வெளியே திருப்பப்பட்டுச் சிதறிப்போகின்றது. கறுப்பு நிறத் துணிகளோ உஷ்ணத்தையெல்லாம் உள்ளே உறுஞ்சிக்கொள்ளும். ஆகையால் உஷ்ண காலங்களில் வெள்ளைநிற உடைகள் காங்கையை வெகுவாய் நீக்கும். கருப்புநிற உடைகளோ உஷ்ணம்அதிகமாய்த் தேகத்தைத் தாக்கும்படி செய்யும். இதனால்தான் கறுப்புநிறத் துணியுள்ள குடைகளை வெயிலில் பிடித்துக்கொண்டு போகும்பொழுது நமக்கு உஷ்ணம் அதிகமாய்த் தோற்றுகின்றது.

## பிள்ளைகளின் உடைகள்.

சிறு குழந்தைகளுக்குக் குளிர்ச்சியைத் தாங்குகிற சக்தி மிகவும் அற்பம். அவர்களுடைய தேக அனலானது அற்ப எதுக்களினால் வேகமாய்க் குறைந்து போகத்தக்கது. இப்படி அவர்கள் தேக அனல் குறைந்துபோனால் பல அபாயமானநோய்கள் சம்பவிக்கும். ஆகையாற் சிறுபிள்ளைகளைத் தகுந்த வஸ்திரங்களைக்கொண்டு நன்றாய் மூடிவைத்திருக்கவேண்டும் விசேஷமாய் குளிர்ச்சியான காலங்களில் பிள்ளைகளை மிகவும் பத்திரமாய்ப் பாாக்கவேண்டும். அக்காலங்களில் பிளானல் முதலிய நல்ல துணிகளினால் குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டும் குளிர்காலங்களில் பிள்ளைகளுடைய உடம்பைமாத்திரம் மூடிவிட்டு, பாதம் கால் தலை முதலியவற்றை மூடாமல் வைத்திருப்பது தீமையாம். இப்பாகங்களையும் தகுந்தபடி மூடி வைக்கவேண்டும. பிளானல் முதலிய சொறசொறப்பான துணிகளினால் குழந்தைகளுடைய அதி நுட்பமான தோல் சேதப்படாதபடிக்கு உள்ளே மிருதுவான பருத்திநூல் வஸ்திரத்தைப்போட்டு அதன்மேல் கம்பளித்துணி உடைகளைப் போடலாம் நமது தேசத்தில் பொதுவாய்ப் பிள்ளைகளை நல்ல வஸ்திரங்களைக்கொண்டு பாதுகாக்கிறதில்லை. இதினால் தான் அவர்களுக்கு அடிக்கடி வயிற்றோட்டம் சீதபேதி ஜலதோஷம் இருமல் முதலிய பல வியாதிகளுண்டாகின்றன.

சிறுபிள்ளைகளைப்போலவே, விருத்தாப்பியரும் அஜீரணம் வயிற்றோட்டம் சீதபேதி க்ஷயரோகம் திமிர்வாதம் முதலிய வியாதிகளுள்ளவர்களும் குளிர்ந்த நேரங்களிலெல்லாம் நல்ல வஸ்திரங்களினால் தேகத்தை நன்றாய் மூடிக்கொண்டிருக்கவேண்டும்.

## உடைகளின் இறுக்கம்.

நாம் தரித்திருக்கும் உடைகள் தேகத்தின் யாதொரு பாகத்தையாவது இறுக்காமல் போதுமான அளவு தளர்ச்சியாகவே இருக்கவேண்டும். அப்படிக்கில்லாவிட்டால், இறுக்கப்படுகிற பாகத்திலுள்ள இரத்த ஓட்டத்திற்குத் தடை நேரிட்டுப் பல தீமைகளுண்டாம். வயிறு இறுக்கப்பட்டால் ஜீரணத்தொழிலுக்கும். ஜீரண கருவிகளுக்தம் தீமையாம். மார்பு இறுக்கப்பட்டால் சுவாசத் தொழிலுக்கும் சுவாசகருவிகளுக்கும் சேதமாம். கழுத்தில் இறுக்கமுண்டானால் அதிலுள்ள பெரிய இரத்தநாளங்கள் நெருக்கப்பட்ட இரத்த ஓட்டத்திற்குத் தடையுண்டாகி பெரிய தொந்தரவுகள் நேரிடும். அதிக கனமும் இறுக்கமுமான தலைப்பாகைகளினால் தலையிலுள்ள இரத்த ஓட்டத்திற்குத் தடை நேரிட்டுத் தலைநோயுண்டாகிறதுண்டு.

## ஈரவஸ்திரம்.

ஈரவஸ்திரங்களைக் கட்டிக்கொண்டிருப்பதினால் சுகத்திற்குப் பெரியகேடுகள்சம்பவிக்கும். இத்தேசத்தில் அநேகர் ஆறு, குளங்களில் ஸ்நானம் பண்ணிவிட்டுத் தாங்கள் சுத்தம்பண்ணின ஈரவஸ்திரங்களையே வெகுநேரம் வரையில் தரித்துக்கொண்டிருக்கிறது வழக்கமாயிருக்கின்றது. இதனால் ஜனங்களுக்குத் தெரியாதபடி அனேக சுகவீனங்கள் சம்பவிக்கின்றன. சில வேளைகளில் மழை முதலான காரணங்களினால் அவர்கள் வஸ்திரங்கள் ஈரமாய் போயினும் அவைகளையே அவர்கள் வீடுவந்து சேரும்வரையில் தரித்துக்கொண்டிருக்கும்படி சம்பவிக்கும். அச்சமயங்களில் அவர்கள் அங்குமிங்குந்திரிந்து, அல்லது விரைவாய் நடந்து தேக முயற்சியினால் சரீர அனலை அதிகப்படுத்திக்கொண்டே இருக்கவேண்டும். இப்படிச் செய்யாமல் ஈரவஸ்திரங்களோடு ஓரிடத்தில் நின்று. அல்லது உட்கார்ந்துக்கொண்டே இருந்தால் மோசமான சில வியாதிகள் சம்பவிக்கிறது உண்டாம்.

## வஸ்திர சுத்தம்.

நமது தேகத்திலிருந்து நித்தந்தோறும் புறப்படுகிற வேர்வையிலுள்ள அசுத்தமான கழிவுபதார்த்தங்களும், ஆகாயத்தில் கலந்திருக்

கும் பல அசுத்தங்களும் நாம் தரித்திருக்கிற வஸ்திரங்களில் எப்போதும் ஒட்டிக்கொண்டே வருகிறபடியால் நாம் அடிக்கடி வஸ்திரங்களை மாற்றி அவைகளை நன்றாய்ச் சுத்தப்பண்ணிக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அவைகளில் படிந்திருக்கும் விஷபதார்த்தங்கள தேகத்திற்குள் பிரவேசிக்கிறதற்கு ஏதுவாயிருக்கிறதுந்தவிர சொரிசிரங்கு முதலிய வியாதிகளுண்டாவதற்கும், ஒட்டுவாரொட்டி விஷ வியாதிகள் உண்டாகிற காலங்களில் அவ்வியாதிகள் நம்மை லகுவாய் அணுகுவதற்கும் ஏதுவாயிருக்கும். சிறுபிள்ளைகளுக்கு உபயோகிக்கிற வஸ்திரங்கள் படுக்கைத் துணிகள் முதலியவற்றைக் கூடியமட்டும் சுத்தமாய் வைத்திருப்பது அவர்களுடைய மிகவும் அவசியமான காரியம். அப்படிச்செய்யாததினால் பலவகை நோய்கள் அவர்களை அணுகுகின்றன.—சக்ரவர்த்தினி.

---

## விசேஷ வர்த்தமானம்.

---

### இனம்பெற்றான்.

திருச்சி செந். ஜோசப் காலேஜ் ஸ்கூல் பைனல் வகுப்பில் வாசிக்கும் மாணுக்கனும் Mr. செஞ்சி-முத்துமாணிக்காச்சாரியார் குமாரருள் ஒருவனுமான S. M. பொன்னுசாமி என்பவன் புரொபசர் பட்டவர்த்தனிட மிருந்து 'சர்க்கஸும் அதன் பிரயோசனமும்' என்ற ஓர் வியாசத்திற்கு இனம் பெறப்பட்டான். தேர்ந்தெடுக்கப்பட்ட 45-வியாசங்களுள் இதுவே முதன்மையானதும் புகழத்தக்கதுமாம். இதுபோல் நம் குலமக்கள் முயற்சிப்பாரானால் குலத்திற்கு பெருமை வாய்க்கும்.

து. ப. வே.

* * *

### ஓர் அதிசயப் பிரசவம்.

சாரெயில் என்ற ஊரிலுள்ள ஒரு முகமதிய ஸ்திரீ ஒருதடவையில் மூன்று ஆண்குழந்தைகளைப் பெற்றாள். அதற்கு மறுநாள் ஒரு பெண் குழந்தையையும் பெற்றாள். தாயும் நான்கு குழந்தைகளும் சௌக்கியமாக இருப்பதாகக் கேட்கின்றோம்.

* * *

### சகோதர அன்பு.

"கேசரி" பத்திரிகை பின் வருமாறு எழுதுகின்றது.

பம்பாய் கல்பதேவி ரோடிலிருக்கும் மிஸ்டர் கோஷி என்பவருக்குச் சமீபத்தில் நெருப்பினால் விபத்துண்டாகி காலும் கையும் வெந்து தோல்கள் வயண்டு போய்விட்டன; இவருடைய சகோதரர் மிஸ்டர் கேசவராவ் கோஷி என்பவர் தன் கால்களிலிருந்ததோலை வெட்டி எடுத்தது தம் சகோதரர் காலில் வைத்து தைக்கச் செய்தார். சகோதரரிடம் அவர் கொண்டுள்ள அன்பு வியக்கத்தக்கது.

* * *

### வியாபார விசேஷம்.

ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி யென்பது உலகத்திலுள்ள மண்ணெய்க் கம்பெனிகளில் பெரிது. இதன் தலைமை ஸ்தானம் அமெரிக்காவிலுள்ள நியூயார்க் காகும். இதன் தலைவர் அமெரிக்க கோடீசுரர்களில் ஒருவரான ராக்பெல்ல ராவர். இந்தக் கம்பெனிக்கு நமது நாட்டிலுள்ள பட்டணங்களிலெல்லாம் கிளைகள் இருக்கின்றன. இந்தக் கம்பெனியாருக்குச் சென்ற எழுவருஷங்களில் 9 கோடியே 10-லட்சம்பவுன் வருமானம் கிடைத்ததென்று அறிகிறோம். அதாவது சுமார் 150 கோடி ரூபாய்! இந்தக் கணக்குப்படி வருஷந்தோறும், இந்தக் கம்பெனிக்குச் சுமார் 12 கோடி ரூபாய் லாபம் கிடைத்து வருகிறது.

## சந்தா வரவு ஜாப்தா.

### 1919ஆ செப்டம்பர்மீ

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | V. ட துரைமுத்து ஆச்சாரி, அருவங்காடு | ... | ... | 1 | 8 | 0 |
| ,, | ராமலிங்காச்சாரி, அருவங்காடு | ... | ... | ... | 1 | 8 | 0 |
| 16 | அண்ணுமலை ஆச்சாரி, மாயவரம் | ... | ... | ... | 1 | 8 | 0 |

# நிறைவேற்றினீர்களா உங்கள் கடமையை?

"விஸ்வகர்மன்-தொழில்" பத்திரிகைக்குப் புதிதாய்ச் சந்தாதார்களைச் சேர்ப்பது இந்த வம்ஸ உற்பவர்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும். இந்தக் கடமையைச் செலுத்துவோர் ஒவ்வொருவரும் விஸ்வகர்மஜாதி மேம்படுவதற்குச் சகாயஞ்செய்த குல உபகாரிகளாவர். இவர்களுக்குப் புகழும் புண்ணியமும் சித்திக்கும்.

நமது வாசகர்களில் ஒவ்வொருவரும் முனைந்து பாடுபட்டால் தனித்தனி குறைந்தபக்ஷம் பத்துப்பேர்களைப் புதிதாய்ச் சந்தாதாரர்களாகச் சேர்க்கலாம். இப்படிச்சேர்த்துத் தரும் கனவான்களுக்கு மிகவும் நன்றிபாராட்டுவதுடன், அவர்கள் திருநாமங்கள், மற்றவர்களுக்குத் தூண்டுதலா யிருக்கும்படி, பத்திரிகையிற் பிரசுரிக்கப்படும்.

தங்கள் தங்களூர்களிலுள்ள விஸ்வகர்மர்களுடைய பெயர்களையும் விலாசங்களையும் நமது வாசகர்கள் எழுதியனுப்புவார்களாயின், அவர்களுக்கெல்லாம் நேரே கடிதமும் மாதிரிப் பத்திரிகையும் அனுப்பப்படும். இவ்வுபகாரமும் பெரிதுங்கொண்டாடப்படும். நண்பர்கள் எத்தனை விதங்களில துணைபுரியக்கூடுமோ அத்தனை விதங்களிலுஞ் சகாயமளித்தருள்வார்களாக.

# விஸ்வகர்ம பக்தோபாக்யானம்

## இதுகாறும் தமிழில் வெளிவராதது.

இது மகாராஷ்டிர பாஷையிலிருந்து தமிழில் செவ்விய வசன வடிவமாகவும், செய்யுள் வடிவமாகவும் மொழிபெயர்க்கப்பட் டிருக்கிறது. டிம்மி 8-பேஜ் கொண்ட 22-பாரமுடையது. நல்ல பளபளப்புள்ள உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்தினுல் அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில் சிவபக்தர், விஷ்ணுபக்தர், தேவிபக்தர் முதலிய பெருந்தலைகயர் பன்னிருவர் சரித்திரங்கள் அடங்கி யிருக்கின்றன. இதிலுள்ள ஒவ்வொரு சரித்திரமும் படிக்கப்படிக்கப் பரமாநந்தத்தை விளைவிக்கும் பான்மையுடையது.

இதனைச் செய்யுள் வடிவமாகச் செய்தவர் வித்வான் ஸ்ரீமத் ம. இராஜகோபால பிள்ளை யவர்கள். இச்செய்யுள்கள் ஒவ்வொன்றும் தேனிலும், பாவினும், கற்கண்டினும் இனிய சுவையுடைத்தாய்ச் சொன்னயம் பொருணயமுடையதா யமைந்திருக்கின்றது. இந்நூல் காவியலக்ஷணம் நிரம்பப்பெற்று யாவரும் சுலபமாய் அறிந்துகொள்ளும் செவ்வியநடை யுடையதா யிருக்கின்றது.

புராணப் பிரசங்கம் செய்வோர்க்கு இஃதோ ரரியபெரிய பக்திநூலாகும். இச்சரித்திரங்களில் அநேக நீதிகளும், மேற்கோள்களும் காட்டப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா—1.

---

# ஜெயவிசுவசிம்மன்

## இது ஒரு தமிழ் நாடகம்.

இந்நாடகம்—செந்தமிழ்க்கவி - சி. கி. சுந்தராச்சாரிய ரவர்களா லியற்றப்பட்டது. இந்நாடகத்தை யாவரும் எளிதினுணருமாறு 5-அங்கங்களாகவும் 23-காட்சிகளாகவும் பிரித்து, சிங்காரம் வீரம் சோகம் என்ற பாகங்களின் ஒவ்வொரு சமயங்களுக்கும் தற்கால நாகரீகங்களுக்கேற்றவாறு பற்பல அற்புத வர்னமெட்டுகளும் படிப்பவர்களுக்குப் பிரத்யக்ஷமாக நடைபெறும் நாவல்போன்ற சிறந்த செந்தமிழ் வசன சம்பாஷணைகளும், விருத்தப்பாக்களும், ஜாவளிகளும், தருக்கங்களும் அமையப்பெற்றுள்ளன. இப்புஸ்தகத்தை வாங்கி வாசிக்கும் நேயர்களுக்கும், நாடகம் நடத்தும் நண்பர்களுக்குமே இதன் அருமைபெருமை நன்கு விளங்கும் இதில் ராஜநீதிகளும், ஸ்திரிகளின் கற்பிலக்கணங்களும் அமைந்துள்ளன.

இந்நாடகம்—டிம்டி 8-பேஜ் கொண்ட 82 பக்கங்களடங்கியது. சொற்பகாப்பிகளே அச்சிட்டிருப்பதால் முந்தினவர்களுக்கே அகப்படுவதன்றி, பிந்தினவர்களுக்குக் கிடைப்பதருமை.

இதன் விலை அணா—8.

விஸ்வகர்ம புத்தகசாலை,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

---

விஸ்வகுலோத்தாரண பிரஸ், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

Registered No. M. 1354.] [வருஷ சந்தா ரூபா மூன்று.

# விஸ்வகர்மன்

## தொழில்

[சம்புடம் 6] [சஞ்சிகை 10]





விஸ்வகர்மன்-தொழில் ஆபீஸ், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| 1. | சிலாசாசன ஆராய்ச்சி ... ... ... | 205 |
| 2. | தொழிற்குறிப்புகள் ... ... ... | 209 |
| 3. | உலகதுன்பம் ... ... ... ... | 210 |
| 4. | வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ... ... ... | 213 |
| 5. | சிதானந்தர் உபதேசங்கள் ... ... ... | 216 |
| 6. | குலாபிமானக்கொத்து ... ... ... | 220 |
| 7. | அகவிலைக்கஷ்டம் ... ... ... | 222 |


## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருஷமொன்றுக்கு தபால் சார்ஜ் உள்பட | | 3—0—0 |
| ஆறுமாதத்திற்கு | ,, | 1—8—0 |
| தனிப்பிரதி | ,, | 0—5—0 |

புதுச் சந்தாதாரர் எந்த மாதத்திலேனுஞ் சேரலாம். ஒரு வருஷச் சந்தாவாவது ஆறுமாதச் சந்தாவாவது முன்பணமாக அனுப்பவேண்டும். அங்ஙன மனுப்பாவிட்டால் வி. பி. தபால் மூலமாக சந்தா வசூல் செய்யப்படும். 1919ஆம் ஜனவரிமீ முதல் இருந்து ஆறாவது சம்புடம் நடைபெறுகிறது.

சந்தாதாரர்களைச்சேர்த்துத்தருவோர்க்குத் தக்ககமிஷன்கொடுக்கப்படும்

## விளம்பர விகிதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பக்கத்திற்கு | மாதம் ஒன்றுக்கு | ... | 3—0—0 |
| ½ | ,, | ,, | ... | 1–12—0 |
| ⅓ | ,, | ,, | ... | 1—0—0 |
| ¼ | ,, | ,, | ... | 0–12—0 |

கடிதங்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.


பிக்கபாடி - கல்யாணசுந்தர ஆச்சாரி,

பரங்கிமலை

(St. Thomas Mount)